


**மீன் வாசம்**

ஊர்க் கூடி தேர்தான் இழுக்க வேண்டும் என்பதில்லை. மீன் கூட பிடிக்கலாம். புதுக்கோட்டை - பொன்னமராவதி அருகே, கொப்பனாப்பட்டி கண்மாயில் நடந்த மீன்பிடித் திருவிழாவில் ஊரே கூடி மீன் பிடித்தது. அன்று ஊரெல்லாம் மீன்வாசம் தானாம்.





# அக்காவின் காதலர்

*டியர் டாக்டர்,*

**என்** அக்காவுக்குத் திருமணமாகி ஒரு வருடமாகிறது. திருமணத்துக்கு முன்பே அவள் ஒருவரைக் காதலித்திருக்கிறாள். அது வீட்டில் யாருக்குமே தெரியாது. வீட்டில் சம்மதிக்க மாட்டார்கள் என அவர்களாகவே பயந்து கொண்டு, காதலைத் துறந்திருக்கிறார்கள். அக்காவுக்கு வீட்டில் பார்த்த வரனையே முடித்து விட்டார்கள். அவளது கணவர் சாஃப்டவேர் இன்ஜினியர். எந்நேரமும் அவருக்கு வேலை பற்றிய சிந்தனைதான். அதனால் என் அக்காவிடம் பெரிதாக அன்பாக நடந்து கொள்ளவில்லை.

கல்யாணமானதும் அவர் அமெரிக்கா போய் விட்டார். அடுத்த 2 மாதங்களில் என் அக்காவையும் அழைத்துக் கொண்டார். அந்த 2 மாத இடைவெளியில் என் அக்கா, அவளது காதலனை சந்தித்துப் பேசியிருக்கிறாள். அவன் அவளுக்கு ஏதோ நம்பிக்கை சொல்லியிருப்பான் போல. அமெரிக்கா போனதும் என் அக்காவின் போக்கே சரியாக இல்லை. அங்கே போனதும், கணவனுடன் சண்டை போட்டு, இனிமேல் அவருடன் வாழ முடியாது எனச் சொல்லியிருக்கிறாள்.

என் மாமா எனக்கு போன் செய்து நடந்த எல்லாவற்றையும் விவரித்தார். நான் என் அக்காவின் காதலனை சந்தித்துப் பேசினேன். அவர்களது போக்கால் குடும்ப நிம்மதி கெடும், இருவரின் வாழ்க்கையும் பாதிக்கும் என எல்லாவற்றையும் எடுத்துச் சொன்னதும் புரிந்து கொண்டான். திருமணமான ஒரு பெண்ணின் வாழ்க்கையில் குறுக்கிடுவது தவறு என்பதையும் உணர்த்தினேன். குடும்ப நிம்மதிக்காக என் அக்காவை மறக்க சம்மதித்தான்.




இது தெரிந்தது முதல் என் அக்கா



மேலும் பெண்களுக்குப் பயனுள்ள செய்திகளுக்கு: http://www.dinakaran.com/ladiesnew



''எதற்காக என்னை 'தொடை வள்ளல்' என்று மக்கள் அழைக்கிறார்கள்?''
''வேறொன்றுமில்லை மன்னா... உங்கள் மடியில் பெண்களை உட்கார வைக்கிறீர்கள் அல்லவா..? அதற்குத்தான்!''
- ஜி.சுந்தரராஜன், திருத்தாங்கல்.



உறவுச்சிக்கலுக்கு தீர்வு சொல்கிறார் மனநல மருத்துவர் கவுதம் தாஸ்



எங்கள் யாருடனுமே பேசுவதில்லை. எங்கள் எல்லாருக்கும் சமுதாயத்தைப் பற்றித்தான் கவலை என்றும், தன் சந்தோஷத்தைப் பற்றி யாருமே நினைப்பதில்லை என்றும் சொல்கிறாள். அவளுக்கு அமெரிக்காவில் இருக்கப் பிடிக்கவில்லையாம். கணவரை விட்டுப் பிரிந்து இந்தியா வரத் துடிக்கிறாள். அவளது கணவரும், வேலை, வேலை என்று அலைந்து, மனைவியோடு நேரம் ஒதுக்காத தன் தவறை புரிந்து கொண்டு, இனிமேல் அன்பாக இருப்பதாகச் சொல்கிறார்.

ஆனால், அவளோ எதையும் கேட்கத் தயாராக இல்லை. ரொம்பவும் வற்புறுத்தி, அறிவுரை சொன்னால், பேருக்கு மனைவியாக வாழ்வதாகவும், வேலைகளைச் செய்து கொண்டு வேலைக்காரி மாதிரி இருப்பதாகவும் சொல்கிறாள். அவள் எக்கச்சக்க மன உளைச்சலிலும், குழப்பத்திலும் இருப்பது தெரிகிறது. எங்கள் எல்லாருக்காகவும் அவள் தன் நிம்மதியையும், சந்தோஷத்தையும் தொலைத்து விட்டு வாழ்வதாக புலம்புகிறாள். அவளை எப்படி மாற்றுவது? இந்தப் பிரச்னைக்கு என்னதான் தீர்வு?

**- பி.எஸ்., கோவை.**

## அன்புச் சகோதரி,

**க**ல்யாணத்துக்குப் பிறகு இது போல முன்னாள் காதலருடன் ஈர்ப்பு வருவது சகஜமான விஷயம் தான். ஒருவேளை அவரையே கல்யாணம் முடித்திருந்தால் எப்படியிருந்திருக்கும் என்கிற எண்ணங்கள் தலைதூக்கும். அதிலும் உங்கள் அக்காவின் கணவர் ஆரம்ப காலத்தில் அவரிடம் அன்பாக நடந்து கொள்ளாமல் இருந்திருக்கிறார். அந்தச் சூழ்நிலையில் உங்கள் அக்காவின் மனம் தடுமாறியிருக்கலாம்.

உங்கள் அக்காவின் பிரச்னை தீர்த்துவிடக் கூடியதுதான். ஆனால், அது ஒரே இரவில் நடக்காது. நடந்து முடிந்த திருமண உறவில் அவரது எதிர்பார்ப்புகள் என்ன என்பதை முதலில் கண்டுபிடிக்க வேண்டும். அதைத் தவிர்த்து ஆளாளுக்கு அவருக்கு அட்வைஸ் செய்து கொண்டிருந்தால், நிச்சயம் ஏற்க மாட்டார்.

கவுன்சலிங் ஒன்றுதான் அவருக்கான உடனடித் தீர்வு. அதன் மூலம், நடந்த எல்லாவற்றுக்கும் அவர் மட்டுமே முழு முதல் பொறுப்பாளி என விளங்கச் செய்யலாம். திருமணத்துக்கு முன்பே காதலைச் சொல்லியிருந்தால், இன்று இந்த நிலையைத் தவிர்த்திருக்கலாம். உங்கள் குடும்பத்தாருக்கு இதில் எந்தச் சம்பந்தமும் இல்லை எனப் புரிய வைக்கலாம். இவ்வளவுக்குப் பிறகும் உங்கள் அக்காவை அவரது கணவர் நேசிப்பதை உணரச் செய்யலாம்.

இப்போதைக்கு உங்கள் அக்காவுக்கு மன உளைச்சலுக்கான மருந்துகள் மிக முக்கியம். அதை எடுத்துக் கொள்ள ஆரம்பித்தால் அவரது சிந்தனையிலும், புரிதலிலும் தெளிவு பிறக்கும்.

**தொகுப்பு: ஆர்.வைதேகி**

## நல்ல அப்பா



**தி**யேட்டர் நிர்வாகி, விளம்பரதாரர், சினிமா டிஸ்ட்ரிப்யூட்டர், கவிஞர்... என பன்முகம் கொண்ட இளங்கோவனின் சமீபத்திய முகம், குணச்சித்திர நடிகர். 'குள்ளநரி கூட்டம்' படத்தில் ஹீரோ விஷ்ணுவின் அப்பாவாக நடித்திருக்கும் இவரது சொந்த ஊர், மதுரை.

''அங்குள்ள தியேட்டர் ஒன்றில் நிர்வாகியாக பணி புரிந்தேன். எனவே சினிமா சார்ந்த மக்களுடன் நட்பு ஏற்பட்டது. ஏராளமான கவிதை, கட்டுரைகளை பத்திரிகைகளில் எழுதியிருக்கிறேன். பிரசுரமான கவிதைகள் நூலாகவும் வந்துள்ளன. இதன் காரணமாகவே பாடலாசிரியர்களுடன் நல்ல பழக்கம் ஏற்பட்டது. இதற்குள் விநியோகஸ்தராக நான் மாறியிருந்தேன். ஆனால், தொடர்ந்து படங்களை விநியோகிக்க முடியவில்லை. படத்தை தயாரிக்கலாம் என்றாலோ அதிக முதலீடு தேவைப்பட்டது. இந்தச் சூழ்நிலையில்தான் இயக்குநர் பாலாஜி, நடிக்க வாய்ப்பு அளித்தார்.

முதலில் தயக்கமாக இருந்தது. இயக்குநர்தான் தைரியம் சொல்லி நடிக்க வைத்தார். ஆனாலும் முதல் நாள் கேமரா முன் நின்ற போது என்னை அறியாமல் என் கால்கள் நடுங்கின. எப்படியோ நடித்து முடித்தேன். இப்போது படம் பார்த்த அனைவரும் பாராட்டும்போது உற்சாகமாக இருக்கிறது. பிரகாஷ்ராஜ் போல் சிறந்த குணச்சித்திர நடிகராக பெயர் வாங்க வேண்டும் என்பதுதான் என் ஆசை...'' என்கிறார் இளங்கோவன்.

**- ப்ரியா படம்: திலீப்குமார்**